**செய்தி வெளியீடு எண்:766** **நாள்: 11.11.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 8.11.2017 அன்று தலைமைச் செயலகத்தில், இந்துசமய அறநிலையத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருப்பாச்சூர் அருள்மிகு வாசீஸ்வர சுவாமி திருக்கோயிலில் 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் மதுரை, ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேதியியல் ஆய்வுக்கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

“கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” எனும் பழமொழிக்கேற்ப தல வழிபாடு பக்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. “காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தலென் இருமூன்று வகையில் கல்லொடு புணர” எனத் தொல்காப்பியர் கூறுவதுபோல் கல்தேடல், கோயில் திருப்பணி ஏற்பாடுகள், புனித நீராட்டல், நடுதல், படையலிடுதல், வாழ்த்தி வணங்குதல் என திருக்கோயில் தொடர்பாக நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்கள் எண்ணற்றவை. இதனை தொன்று தொட்டு மேற்கொள்ளப்பெற்ற வழிபாட்டு மரபுகள் பல்வேறு வகையான வளர்ச்சிகளைப் பெற்றுள்ளன. இதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருப்பாச்சூர் அருள்மிகு வாசீஸ்வர சுவாமி திருக்கோயிலில் 2442 சதுர அடி கட்டட பரப்பளவில், 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 108 பக்தர்கள் உணவருந்தும் வகையில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் மதுரை, ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 3669 சதுர அடி கட்டட பரப்பளவில் 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேதியியல் ஆய்வுக்கூடம், என மொத்தம் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர்.ஜெயா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 11.11.2017**